**அசல் வழக்கு எண் : 80/2014**

**நாள்: 20.11.2025**

**வாசா.1—ரங்கராஜீ, த/பெ.ரகுபதிநாயனார்**

வாதி மற்றும் வாதி வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதிகளின் வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் வா.சா.1—ன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1. நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்தின் நான்கு புற எல்லைகளை கூறஇயலுமா என்றால் வடக்குபுறத்தில் சாலையின் கிழக்குபுறத்தில் நான் வாங்கிய நிலம் உள்ளது. அதன் புல எண் என்னவென்றால் 144/3C ஆகும். நான் இவ்வழக்கை புல எண்.144/3C—ல் அமைந்துள்ள நிலத்திற்காக தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது புல எண்கள்.142/3B மற்றும் 144/1B ஆகியவற்றில் அமைந்துள்ள நிலத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2. புல எண்.142/3B—ல் அமைந்துள்ள நிலத்திற்கான நான்குபுற எல்லைகள் என்னவென்றால் அதன் வடபுறத்தில் புல எண்.144/1B—ல் அமைந்துள்ள எனது நிலம் உள்ளது. கிழபுறத்தில் நான் வாங்கிய நிலமானது புல எண்.144/3C என கொண்டு அமைந்துள்ளது. அதன் தெற்குபுறத்திலும் எனக்கு சொந்தமான நிலம் தான் உள்ளது. புல எண்.144/1B—ன் நான்குபுறங்களில் யாருடைய நிலம் உள்ளது

என்றால் வடபுறத்தில் எனது நிலம் உள்ளது. கிழபுறத்தில் 144/3C என்ற புல எண் கொண்ட நிலம் உள்ளது. தெற்குபுறத்தில் எனக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. மேற்குபுறத்தில் 142/3B என்ற புல எண் கொண்ட நிலம் உள்ளது.

3. புல எண்.144/1B நிலத்தின் வடபுறத்தில் இறந்த 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலமானது புல எண்.144/1A–ல் அமைந்துள்ளது என்றால் அவருடைய நிலமும் உள்ளது. என்னுடைய நிலமும் உள்ளது. மேற்படி என்னுடைய நிலமானது எந்த புல எண்ணில் அமைந்துள்ளது என்றால் 142/3B–ல் அமைந்துள்ளது. அதன் வடபுறத்திலும் என்னுடைய நிலமே உள்ளது. வடபுறம் குறித்து தான் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை உள்ளது என்றால் வடபுறம் மற்றும் மேற்குபுறத்தில் உள்ள நிலங்கள் குறித்து பிரச்சனை உள்ளது. நான் நிலத்தை கிரையம் பெறும்போது அதனை அளவீடு செய்துதான் கிரையம் பெற்றேனா என்றால் ஆம். இச்சொத்து குறித்த வில்லங்க ஆவணங்களை பரிசீலணை செய்த பின்னர் தான் நான் கிரையம் பெற்றேன்.

4. கடந்த 18.02.1974 அன்று சேலத்தை சேர்ந்த **S.N.**பாண்டுரங்கன் என்பவரிடமிருந்து இத்தாவா சொத்தை வைத்து ஆதார கடன் பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் இத்தாவா சொத்தை கிரையம் வாங்கியது தவறு என்றாலும், தாவா சொத்தில் நான் எப்போதும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றாலும், நான் தாவா சொத்தின் சுவாதீனத்தை

என் வசம் எடுத்துக்கொண்டேன். தாவா சொத்தை தற்போது வரை இறந்த 1–ம் பிரதிவாதியின் குடும்பத்தார் தான் அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது 1–ம் பிரதிவாதிக்கு அவரின் குடும்ப பாகம் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது நிலத்திற்கும் பிரதிவாதியின் நிலத்திற்கும் இடையே எவ்விதமான வரப்பும் இல்லை என்றாலும், பிரதிவாதிகள் தான் தாவா சொத்தையும் சேர்த்து அனுபவம் செய்து வருகின்றனர் என்றாலும் சரியல்ல. சாட்சி தாமாக முன்வந்து 05.09.2015 அன்று நீதிமன்றத்தின் உத்தரவின் மூலமாக நில அளவையர் வந்து தாவா சொத்தை அளவீடு செய்து அது குறித்த அறிக்கையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றார். மேற்குறிப்பிட்டுள்ள நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையில் 'புல எண்.144/1B–ன் மேற்குபக்கம் உள்ள ஒரு பகுதி நிலம் சர்வே எண்.142/3B–ல் கலந்து இருந்தது' என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது தவறாகும்.

5. பிரதிவாதிகள் எனது அனுபவத்திற்கு இடையூறு செய்ததாக நான் தெரிவித்துள்ளேன். என்ன இடையூறு செய்துள்ளார்கள் என்றால் வரப்பு போடுவது, கால்நடைகளை மேய்ப்பது மற்றும் தங்களுக்கு அந்நிலத்தில் பாத்தியம் உள்ளதாக தெரிவித்து தொந்தரவு செய்தனர். அவர்கள் என்னிடம் என் நிலத்தை கிரையம் கொடுக்கும்படி கேட்கவில்லை என்றால் கேட்டனர். எனது முன்பாத்தியஸ்தரான பெருமாள் என்பவர் எனக்கு கிரையம் எழுதிகொடுத்த சமயத்தில் இருந்தே அவர்கள்

அந்நிலத்தை கிரையம் பெற முயற்சி செய்து வந்தனர். நான் கூறுவது தவறு என்றாலும், தாவா சொத்தை நான் கிரையம் பெற்றது அவர்களை கட்டுப்படுத்தாது என்றாலும், தாவா சொத்தானது பிரதிவாதிகளின் கூட்டு குடும்ப சொத்து என்றாலும், அது குறித்து பிரதிவாதிகளிடையே பாகம் எதுவும் பிரிக்கபடவில்லை என்றாலும் சரியல்ல. பாகம் பிரிக்கப்பட்டது. அது குறித்த பட்டாவினை நீதிமன்றத்தில் நான் சமர்பித்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றாலும், அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சமர்ப்பித்தேன். தேவையென்றால் மீண்டும் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். நான் பிரதிவாதிகளுக்கு இடையூறு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் ஆகையால் இவ்வழக்கானது பிரதிவாதிகளுக்கான செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**வா.சா.1 ஆனவர் வாதி தரப்பில் மறுவிசாரணை செய்யப்படவில்லை.**

SARANYA M Digitally signed by SARANYA M Date: 2025.11.20 16:26:23 +0530